# சி. அப்துல் ஹக்கீம் கல்லூரி (தன்னாட்சி)

தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் ‘A+’ தகுதிச் சான்று பெற்றது.
(திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
மேல்விஷாரம் - 632 509. இராணிப்பேட்டை மாவட்டம்.

# தமிழ்த்துறை

## உமறுப்புலவர் தமிழ் மன்றம்

## மாநில அளவிலான இலக்கியப் போட்டிகள்

பொன்விழா கண்ட சி.அப்துல் ஹக்கீம் கல்லூரித் தமிழ்த்துறை சார்பாக ஆண்டுதோறும் முத்தமிழ் விழா நிகழ்வில் மாணவ, மாணவியர்களுக்கிடையேயான படைப்பாற்றலை வெளிக்கொணரும் விதமாகப் பல்வேறு கலை இலக்கியப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டும் பின்வரும் தலைப்புகளில் போட்டிகள் நடத்தி, பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்க உள்ளோம். எனவே தங்கள் கல்லூரியில் பயின்று வரும் மாணவ, மாணவியர்களைத் தேர்ந்தெடுத்துப் போட்டிக்கான பட்டியல் தயாரித்து 06.02.2023 (திங்கட்கிழமைக்குள்) கல்லூரி முதல்வர் அல்லது தமிழ்த்துறைத் தலைவர் முகவரிக்குத் தவறாமல் பரிந்துரைக்கும்படி அன்பாய் வேண்டுகின்றோம்.

### பரிசு விவரம்

முதல் பரிசு : **ஜனாப் அப்துல் ஜமீல் சாஹிப் நினைவு சுழற்கோப்பை & பரிசுத்தொகை ரூ. 1000/- மற்றும் சான்றிதழ்.**

இரண்டாம் பரிசு: **பரிசுத்தொகை ரூ. 750/- மற்றும் சான்றிதழ்.**

மூன்றாம் பரிசு: **பரிசுத்தொகை ரூ. 500/- மற்றும் சான்றிதழ்.**

### பேச்சுப் போட்டி நடைபெறும் விவரம்

**நாள்** : 08.02.2023 புதன் கிழமை **நேரம்** : காலை 09.30 மணி

**இடம்** : சி.அப்துல் ஹக்கீம் கல்லூரிக் கருத்தரங்க வளாகம்.

### தலைப்புகள்

**பேச்சுப் போட்டி** : **“தொடுவானம் தூரமில்லை...!”**

**கட்டுரைப் போட்டி** : **“ முன்னேற்றம்...எதனை நோக்கி? ”**

**கவிதைப் போட்டி** : **“பேசாத பொருளும் பேசினால்...!”**

**சிறுகதைப் போட்டி** : **“விடுதலை”**

**வழிமுறைகள்:**

ஒரு கல்லூரியிலிருந்து அதிகபட்சமாக இரண்டு மாணவர்கள் பேச்சுப் போட்டியில் பங்கேற்கலாம். பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் மட்டும் போட்டி நாளான 08.02.2023 புதன் கிழமை அன்று காலை 9.15 மணிக்குள் தங்கள் ஆளரிச் சான்றிதழுடன் (IDENTITY CARD) வருகையைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

- பேச்சுப் போட்டிக்கான கால அளவு ஐந்து நிமிடங்கள் மட்டுமே.
- கட்டுரை A4 தாளில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- கவிதை A4 தாளில் 30 வரிகளுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- சிறுகதை A4 தாளில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- கவிதை, கட்டுரை மற்றும் சிறுகதை போன்ற போட்டிகளுக்கான படைப்புகள் 08.02.2023 (புதன் கிழமைக்குள்) முதல்வர் அல்லது தமிழ்த்துறைத் தலைவர் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
- போட்டியில் பங்கேற்கும் மாணவ, மாணவிகள் குறித்த நேரத்தில் வருகை தர வேண்டும்.
- போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
- வெற்றி பெற்றவர்களுக்கு முத்தமிழ் விழா மேடையில் பரிசுகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு போட்டிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று படைப்புகளை மட்டும் அனுப்புதல் வேண்டும்.
- முத்தமிழ் விழா நடைபெறும் நாள் வெற்றி பெற்ற கல்லூரிகளுக்குத் தெரிவிக்கப்படும்.

உமறுப்புலவர் தமிழ் மன்ற இலக்கியப் போட்டிகள் சிறப்புடன் நிகழ்ந்திட, தாங்கள் அனைவரும் அன்பான ஒத்துழைப்பும் ஆதரவும் நல்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி!


**பேரா. அ.ஐ.அப்துர் ரகீப்**
**தமிழ் மன்றத் துணைத்தலைவர்,**
**உமறுப்புலவர் தமிழ் மன்றம்,**
**கைப்பேசி : 8610236724**
**மின்னஞ்சல்:aj.rakhib.tamil@gmail.com**

**முனைவர் பீ.முகம்மது யூசுப்**
**இணைப் பேராசிரியர் & தலைவர்**
**தமிழ்த்துறை.**
**சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி (தன்னாட்சி)**
**மேல்விஷாரம் - 632 509**
**கைப்பேசி : 8248406100**

**முனைவர் எஸ்.எ.சாஜித்**
**முதல்வர்**
**சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி (தன்னாட்சி)**
**மேல்விஷாரம் - 632 509**
**தொலைபேசி : 04172 – 266487**
**மின்னஞ்சல்:hakeemcollege@reddiffmail.com**


*********